**இலங்கை சேர்ட் (தனியார்) லிமிடெட் கம்பனி - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை சேர்ட் (தனியார்) லிமிடெட் கம்பனியின் (''கம்பனி'') 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து கம்பனியின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களின் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமம் 2.52 பந்தியின் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை ஈடுசெய்து கணக்கு கூற்றுக்களில் காண்பிக்க முடியாதிருந்த போதும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 21,119,645 ஆன காசேட்டின் பிரகாரம் மறைமீதி ரூபா 84,484,182 ஆனது காசு மற்றும் காசுக்சுக்கு சமமான மீதிகளில் ஈடுசெய்து காண்பிக்கப்பட்டிருந்தது. | ரூபா 200,000 இனை விஞ்சுகின்ற கொடுக்கல் வாங்கல்களின் போது மேமிப்புப் கணக்கில் சுயமான வரவு அல்லது செலவு வைக்கும் அடிப்படையில் இலங்கை சேர்ட் இனால் தமது நடைமுறை கணக்கின் 200,000 மீதி மாத்திரம் பேணிச் செல்லப்படுகின்றது. நடைமுறை கணக்கின் மூலம் கொடுப்பனவு செய்யும் போது கம்பனியின் காசேட்டில் வங்கி நிரலில் மறைபெறுதி காண்பிக்கப்பட்ட போதும் உரிய காசோலை வங்கிக்கு சமர்ப்பிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தின் போது அந்தக் காசோலைக்காக தேவையான பணத்தின் அளவு சுயமாக சேமிப்புக் கணக்கிலிருந்து நடைமுறைக் கணக்கிற்கு செலவு வைக்கப்படுகின்றது. அதன் பிரகாரம் இந்த மறை பெறுமதி ரூபா 21,119,645 உள்ளபடியாக வங்கியில் காணப்படுகின்ற மேலதிக பற்றாக இல்லாதிருந்ததுடன் அது கம்பனியின் புத்தகங்களில் காணப்படுகின்ற மீதியாகும். | நியமத்தின் பிரகாரம் கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 7.8(பீ) பந்தியின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று மறைமுக முறையின் பிரகாரம் தயாரிக்கப்படும் போது செயற்பாட்டு நடவடிக்கைகளில் உருவான காசுப்பாய்ச்சல் கணிப்பிடுவதற்காக காசல்லா விடயங்கள் மாத்திரம் சீராக்கப்பட வேண்டியிருந்த போதும் மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட ரூபா 660,000 ஆன பணிக்கொடைப் பெறுமதி காசல்லா சீராக்கத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தின் போது செலுத்தப்பட்ட பணிக்கொடை பெறுமதி காசு அல்லாத சீராக்கங்களின் கீழ் காண்பிக்கப்படாமல் அதற்கு கீழ் உள்ள செயற்பாட்டு நடவடிக்கைகளில் உருவான காசுப்பாய்ச்சலின் கீழ் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தகவல் தொடர்பு மற்றும் தொழில்நுட்ப முகவராண்மை கம்பனியிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 44,001,285 ஆன மீதி 2017 ஆம் ஆண்டு முதல் அறவிடுவதற்கு தவறியிருந்தது. | இந்த விடயங்கள் தொடர்பாக ICTA நிறுவனம் மற்றும் இலங்கை சேர்ட் இற்கிடைய கடித பரிமாறல்கள் சில மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அது தோல்வியடைந்தமையினால் இந்த ரூபா 40.2 மில்லியன் மீதி தொடர்பாக பரீட்சிப்பதற்காக வரிசை அமைச்சினால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவின் அவதானிப்புக்கள் கிடைத்தவுடன் அதன் பிரகாரம் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பெறவேண்டிய சகல பணமும் அறவிடப்படல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆம் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் வழிகாட்டி 4.3 iii | வழிகாட்டியின் பிரகாரம் பெறுவனவுகள் மற்றும் விநியோகித்தல்கள் என்ற இரண்டினதும் முகாமைத்துவத்திற்காக முறையான பொருட்பதிவேட்டு முறைமையொன்று காணப்படுவதை கம்பனி உறுப்படுத்த வேண்டியிருந்த போதும் பொருட்பதிவேடு தொடர்பான முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம் . எதிர்காலத்தில் பொருட்பதிவேடுகள் தொடர்பாக முறையான முறைமையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான பொருட்பதிவேட்டு முறைமையொன்று பேணிச் செல்லப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 7,902,861 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 5,512,737 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 2,390,124 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு ரூபா 5,459,000 அதாவது 71 சதவீதம் ஏனைய வருமானம் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டு முதல் கம்பனியின் சம்பளம் தயாரிக்கும் பணிகளுக்காக வெளியிலுள்ள கம்பனியொன்றின் சேவை பெறப்பட்டிருந்தது. ரூபா 3,060,000 ஒப்பந்தப் பெறுமதியில் 2018 ஆகஸ்ட் 24 ஆம் திகதி தனியார் கம்பனியுடன் 03 வருட காலத்திற்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்த கால எல்லையை விஞ்சிய பின்னரும் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமல் சேவை தொடர்ந்தும் பெறப்பட்டிருந்ததுடன் ஒப்பந்த விலை ரூபா 85,000 முதல் ரூபா 100,000 வரை திருத்தப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 1,110,000 செலுத்தப்பட்டிருந்தது. பதவியணியினர் சம்பளம் செலுத்துவதற்காக கம்பனி சம்பளம் தயாரிக்கும் கம்பனிக்கு பணம் செலுத்தியிருந்ததுடன் அதன் ஊழியர்கள் நம்பிக்கை பொறுப்பு நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு மாதத்திற்கு அண்னளவாக ரூபா 1,279,332 வீதம் மீளாய்வாண்டில் ரூபா 15,351,987 தொகை 03 நாட்கள் முதல் 41 நாட்கள் வரை ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் என்பவற்றிற்கு அனுப்பாமல் நிறுத்திவைத்திருந்தனர். | மீண்டும் கேள்வி கோருவதற்கு முன்னர் சேவையினைப் பெற்ற நிறுவனத்திற்கே கால ரீதியில் கட்டணத்தை உயர்த்தி கால நீடிப்பை வழங்கி பேணிச்செல்வதற்கு பணிப்பாளர் சபை தீர்மானம் எடுத்திருந்தது. மேலும் இந்த ஒப்பந்தம் காலாவதியான காலமான 2021 ஆகஸ்ட் மாதத்துடன் ஒப்பிடும் போது புதிய கேள்வி ஆரம்பிக்கப்பட வேண்டிய காலம் கொவிட் பரவியமையின் காரணமாக வரையறுக்கப்பட்ட மனித வளங்களின் அளவினை பயன்படுத்தி கடமைகளை மேற்கொள்ளுதல் வரையறுக்கப்பட்டிருந்தது. கம்பனியில் கணக்குப் பிரிவை ஸ்தாபித்து சகல கணக்குகள் மற்றும் சம்பளம் தயாரிக்கும் நடவடிக்கைகளை கம்பனியில் உள்ளீர்த்தல் 2023.07.01 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பெறுகைகள் வழிகாட்டிக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்.

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆம் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கை செயல் கைநூல் 6.6 பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வரைவு ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் கம்பனி 270 நாட்களின் பின்னர் கணக்குகளை சமர்ப்பித்திருந்தது. | நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வரைவு ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் காய்வாய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியதை ஏற்றுக்கொள்கின்றோம். | கணக்குகள் 60 நாட்களுக்குள் காணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4.2 கூட்டிணைந்த திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நம்வபர் 16 ஆம் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கை செயல் கைநூல் 2.3 பந்தியின் பிரகாரம் வருடாந்த பாதீடு, செயல்நடவடிக்கைத் திட்டத்துடன் ஐந்து வருடங்களுக்காக கூட்டிணைந்த திட்டமும் தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் கம்பனி அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கம்பனியில் 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. எனினும் இந்த கம்பனி இதுவரை ஒதுக்கீட்டு அதிகாரச் சட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டை மாத்திரம் பயன்படுத்துகின்றமையால் அவ்வாறு ஒதுக்கப்படுகின்ற நிதி ஏற்பாட்டிற்கு மாத்திரம் செலவின பதிவேட்டைத் தயாரித்து வரிசை அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டிற்காக மாத்திரம் தயாரிக்கப்பட்டமையால் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் ஐந்து வருடங்களை மேவுகை செய்யும் வகையில் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். |